30.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மானியத்துடன் கால்நடை தீவனப் பயிர் வளர்க்க விண்ணப்பிக்கலாம்

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மானியத்துடன் கால்நடை தீவனப் பயிர் வளர்க்க விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடை வளர்ப்போரின் பசுந்தீவன உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்களை ஊக்கப்படுத்தும் வகையிலும், தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நிகழ் நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவன அபிவிருத்தி திட்டங்கள் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

இறவையில் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் பசுந்தீவன ஒட்டுப்புல் சாகுபடி செய்திட 0.25 ஏக்கரில் 4000 புல் கரணைகள் பயிரிடுவதற்கு மானியமாக ரூ.2000 வழங்கப்படும். பயனாளி இறவை பாசனம் உள்ள கால்நடை வளர்ப்பவராக இருத்தல் வேண்டும்.

மானாவரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச்சோளம் மற்றும் தீவனத்தட்டைப்பயிறு பசுந்தீவன சாகுபடி செய்திட விதைகள் மானியமாக வழங்கப்படும். தரச்சான்று தீவன விதை உற்பத்தி செய்ய தீவனச்சோளம், தீவனத்தட்டைப்பயறு விதைகள் முன்னோடி விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுதல். உற்பத்தி செய்யப்பட்ட தரச்சான்று விதைகள் அன்றைய சந்தை விலைக்கு துறையின் மூலம் கொள்முதல் செய்யப்படும்.

கால்நடை வளர்க்கும் முன்னோடி விவசாயிகளுக்கு மண்புழு உர உற்பத்தி மற்றும் பசுந்தீவன சாகுபடியின் நவீன தொழில்நுட்பம் குறித்து கால்நடை பண்ணையில் ஒரு நாள் பயிற்சி வழங்கப்படும். ஊறுகாய்ப்புல் தயார்செய்வதற்கு நூறு சதவீதம் மானியம் வழங்கப்படும். பயனாளி குறைந்த பட்சம் 2 கால்நடை

வைத்திருப்பவராகவும் 1 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு, சோளம், மக்காச்சோளம் சாகுபடி செய்யும் புல்வெட்டும் கருவி வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

புல்வெட்டும் கருவி 60 சதவீத மானியத்துடன் வழங்கப்படும். 0.5 ஏக்கர் இறவையில் அதிக மகசூல் தரும் பல்லாண்டு பசுந்தீவனப்பயிர் சாகுபடி செய்யும் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படும். கால்நடைகளுக்கான அடர் தீவன அசோலா திடல் அமைப்பதற்கு ரூ.2550-ம் (100 சதவீதம் மானியம்) இடு பொருள்கள் வழங்கப்படும்.

கால்நடை வளர்ப்போருக்கு அகத்தி, சூபாபுல், கல்யாண முருங்கை மரக்கன்றுகள் ஒரு நபருக்கு 10 வீதம் மானியமாக வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் விண்ணப்ப படிவத்தை ஜ்ஜ்ஜ்.ற்ட்ர்ற்ட்ன்ந்ன்க்ண். ற்ய்.ய்ண்ஹ்.ண்ய் என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

விண்ணப்ப படிவத்தில் பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு முழுமையாக பூர்த்தி செய்து செப்டம்பர் 6 ஆம் தேதிக்குள் தூத்துக்குடி கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் சேர்க்க வவேண்டும்.

திருநெல்வேலி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய சங்க பொது மேலாளரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை அளித்து பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிராக்டர், டிரெய்லர்களுக்கு வரிவிலக்கு

வேளாண் நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படும் டிராக்டர், டிரெய்லர்களுக்கு மோட்டார் வாகன வரி செலுத்துவதில் இருந்து விலக்கு தரப்பட்டுள்ளது இதற்காக அச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சிறு, குறு விவசாயிகள் உற்பத்திப் பொருள்களை 6 மாதங்கள் வரை சேமிக்க ரூ.2 லட்சம் ஈட்டுக்கடன் வழங்கப்படும்.

கருவேல மரங்கள் அழிப்பு: நிலத்தில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை முற்றிலும் அழித்து சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யும் வகையில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நில வங்கித் திட்டம்: சாகுபடி செலவை பெருமளவு குறைக்கவும், இயந்திரமயமாக்கலை மேம்படுத்தவும்,விவசாயிகள் வைத்திருக்கும் சிறு நிலப்பகுதிகளை ஒன்று திரட்டி நில வங்கி என்ற புதிய திட்டத்தை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசனப் பகுதிகளுக்கும் சம்பா தொகுப்புத் திட்டம்..!

டெல்டா மாவட்டங்களுக்கு தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்துள்ள சம்பா தொகுப்புத்திட்டத்தின் மூலம் ரூ.1.83 கோடி மானிய உதவிகள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள காவிரி பாசன விவசாயிகளுக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் சு. கணேஷ் வெளியிட்ட தகவல்:

கடந்த 18.08.2016 அன்று சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் காவிரி பாசன மாவட்ட விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத் திட்டம் ரூ.64.30 கோடி மதிப்பில் தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டது. நடப்பாண்டு இத்திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட காவிரி டெல்டா பகுதி விவசாயிகளும் பயன்பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையிலும், குறைவான மழை, தேவையான அளவு தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்காத சூழ்நிலையிலும் காவிரிப் பாசன பகுதி விவசாயிகள் எவ்வித பாதிப்புக்கும் ஆளாகி விடக் கூடாது என்ற நோக்கத்தில் இத்திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார்.

சம்பா தொகுப்புத் திட்ட உதவிகள்:

நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ள வசதியாக தரிசு நிலங்களில் உழவு மேற்கொள்ளும் பணிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500- பின்னேற்பு மானியம். தரமான சான்று பெற்ற உயர்விளைச்சல் நெல் ரக விதைகளுக்கு கிலோவுக்கு ரூ.10- மானியம். நேரடி நெல் விதைப்பு மேற்கொண்ட பகுதிகளில் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ள வசதியாகக் களைக்கொல்லி பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.250- ம், துத்தநாகச் சத்துக் குறைபாட்டினை போக்க துத்தநாக சல்பேட் பயன்படுத்த ஏக்கருக்கு ரூ.200 -ம், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600 -ம், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும்

விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரமும் பின்னேற்பு மானியங்களாக வழங்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா தொகுப்புத் திட்டம் காவிரி பாசன பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி, கந்தர்வகோட்டை, திருவரங்குளம் ஆகிய வட்டாரங்களில் இத்திட்டம் ரூ.1.83 கோடி மானிய நிதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு உழவு மானியம் 18 ஆயிரம் ஏக்கருக்கும், களைக்கட்டுப்பாட்டு மானியம் 12,500 ஏக்கருக்கும், துத்தநாக சல்பேட் மானியம் 3 ஆயிரம் ஏக்கருக்கும், விதைகளுக்கான மானியம் 200 மெ.டன்னும், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மானியம் 2 ஆயிரம் ஏக்கருக்கும், இயந்திரம் மூலம் நெல் நடவு மானியம் 1000 ஏக்கருக்கும் என மொத்தம் ரூ.1.83 கோடி மானிய மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்தகைய அம்சங்களை உள்ளடக்கி சம்பா தொகுப்பு திட்டம் தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது.

சம்பா தொகுப்புத் திட்டத்தில் காவிரி பாசன பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். குறிப்பாக சிறு, குறு, ஆதிதிராவிடர், மகளிர் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகள், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு, சிட்டா அடங்கல், வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற அடையாள அட்டைகளுடன் சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தில் உரிய படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

காவிரி பாசன பகுதி விவசாயிகள் மேற்கொள்ளும் உழவுப் பணி, களைக்கொல்லி, துத்தநாக சல்பேட் பயன்படுத்துதல், விதைப்புக் கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளுதல், இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகள் ஆகிய இனங்களுக்கு உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களுடன் சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தில் விண்ணப்பிக்கக் வேண்டும். எனவே, காவிரி பாசன பகுதி விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி இத்திட்டத்தின் பயன்களை பெறலாம் என்றார் ஆட்சியர்.

## வேளாண் தகவல் மையத்தில் நாளை காளான் வளர்ப்பு பயிற்சி

காளான் வளர்ப்பு குறித்து ஒருநாள் பயிற்சி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தகவல், பயிற்சி மையத்தில் புதன்கிழமை (ஆக.31) நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில், இளைஞர்கள், மாணவர்கள், தொழில்முனைவோர், வியாபாரிகள், தொண்டு நிறுவனத்தினர், வீட்டிலிருப்போர் உள்ளிட்டோர் கலந்துகொள்ளலாம். பயிற்சியின் நிறைவாக சான்றிதழ் வழங்கப்படும்.

இதில், கலந்துகொள்ள விரும்புவோர் விவரங்களுக்கு 044-26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கஞ்சியேந்தல் கிராமத்தில் நெல் வரிசை விதைப்பு செயல்விளக்கம்

பரமக்குடி அருகே உள்ள கஞ்சியேந்தல் கிராமத்தில் சனிக்கிழமை நெல் வரிசை விதைப்பு செயல்விளக்கம் நடைபெற்றது.

வேளாண்துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.அரிவாசன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர்கள் ச.கண்ணையா, வே.ஜெயராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் உயிர் உரங்கள் மற்றும் நெல் நுண்ணூட்டங்கள் பெறுவது மற்றும் உரங்கள் குறைந்த விலையில் பெறுவது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், நெல் ரகத் தேர்வு, விதை நேர்த்தி, உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் நெல் வரிசை விதைப்பு ஆகியவை குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்துகொண்ட 30 விவசாயிகளில் 5 பேருக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் முன்னதாக வேளாண்மை அலுலர் ப.கருப்பையா வரேவற்றார். இதில் வேளாண்துறை அதிகாரிகள் ஆர்.தனதுரை, நா.பரிமளா, தொழில்நுட்ப மேலாளர் மா.ஜெயப்பிரதா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## மேலூர் பகுதியில் பலத்த மழை

மேலூர் சுற்று வட்டாரத்தில் செவ்வாய்க்கிழமை மாலை சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது.

கடந்த சில தினங்களாக மேலூர் பகுதியில் மாலைநேரத்தில் மிதமான மழை பெய்து வந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை மேலூர், சிட்டம்பட்டி, அழகர்கோவில், கொட்டாம்பட்டி சுற்று வட்டாரத்தில் சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் பலத்த மழை பெய்தது.

ஒரு போக சாகுபடிப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு, வாழை தோட்டப் பயிர்களுக்கு இம்மழை பெரிதும் உதவியாக உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

## செப்.1 முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் செப். 1 முதல் 21 ஆம் தேதி வரை நடைபெற உள்ள சிறப்பு முகாமில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட கால்நடைத்துறை இணை இயக்குநர் ஜெகதீசன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி: தமிழகத்தில் உள்ள கால்நடைகளுக்கு, தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் இதுவரை 10 சுற்றுக்களாக தடுப்பூசி போடும் பணி நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில், செப்.1 முதல் 21 ஆம் தேதி வரை, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு 11 ஆவது சுற்று தடுப்பூசிப் போடும் பணி நடைபெற உள்ளது.

கால் மற்றும் வாய் கோமாரி நோய், கலப்பின மாடுகளை அதிகமாக பாதிக்கிறது. உயிரிழப்பு குறைவாக இருந்தபோதிலும், பால் உற்பத்தி குறைவதால் விவாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இதுகுறித்து விவசாயிகளிடம் ஏற்கனவே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நோய்க்கான ஊநீர் (மருந்து) அதற்கென உருவாக்கப்பட்ட குளிரூட்டும் அறைகளில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீதம் தடுப்பூசி பணிகள் நடைபெறுவதற்கு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## கொடைக்கானலில் தொடர் மழை

கொடைக்கானலில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வரும் நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வெயில் நிலவியது. இதைத் தொடர்ந்து மாலையில் 30 நிமிடங்கள் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த மழை, பீன்ஸ், கேரட், பீட்ரூட் போன்ற பயிர்களுக்கு ஏற்றதாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## பழனியில் கோடையிலும் நெல் சாகுபடி தீவிரம்

பழனியை அடுத்த பாலாறு, வரதமாநதி அணை பாசன பகுதிகளில் கோடையிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் திண்டுக்கல் மாவட்டம் பழனி பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் பழனியைச் சுற்றியுள்ள அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இந்நிலையில் கடந்த சிலதினங்களுக்கு முன் வரதமாநதி, பாலாறு மற்றும் குதிரையாறு அணைகள் கோடைகால பாசனத்துக்காக திறக்கப்பட்டன. தண்ணீரின் இருப்பைப் பொருத்து நீரின் திறப்பு அளவு மாறுபடும் என பொதுப்பணித் துறையினரால் அறிவிக்கப்பட்ட நிலையில், அணைகளின் பாசனப் பகுதிகளில் நெல் பயிர் சாகுபடிப் பணிகள் தொடங்கின. தற்போது ஒரு மாதத்துக்கு மேலான நிலையில் பல இடங்களிலும் நெற்பயிர் கதிர்பிடிக்க ஆரம்பித்துள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் பல இடங்களிலும் நெல்அறுவடை பணிகள் துவங்கி விடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில் நெல்லுக்கு போதிய விலை இல்லாத நிலை நீடித்து வருகிறது. விவசாயிகளின் அவசரத் தேவையை அறிந்த வியாபாரிகள் நெல்லை குறைந்த விலைக்கே கொள்முதல் செய்கின்றனர். பழனியின் வடக்குப் பகுதிகளில் நெல்பயிரிட்டு தண்ணீர் பற்றாக்குறையால் அவற்றை ஆடுகள் மேய்ந்து வரும் நிலையில் வியாபாரிகள் நெல் விலையைக் குறைத்துள்ளது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இதனால், இப்பகுதியில் அரசின் நெல்கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே, மாவட்ட

நிர்வாகம் இந்த முறை பழனியை அடுத்த பாலசமுத்திரம், ஆயக்குடி பகுதிகளில் நெல்கொள்முதல் மையம் அமைப்பது அவசியமாகும்.

## தேவகோட்டை பகுதியில் பலத்த மழை

தேவகோட்டை மற்றும் கல்லல் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை கனமழை பெய்ததால் பொது மக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தேவகோட்டையில் கடந்த இரண்டு நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் இடியுடன் கூடிய கன மழை பெய்யத் தொடங்கியது. தேவகோட்டை பேருந்து நிலையம், ஒத்தக்கடை, ராம் நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும், கல்லல் சுற்று வட்டாரத்திலும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மழை பெய்தது. மேலும் மழையின் காரணமாக சாலைகளில் மழைநீர் பெருக்கடுத்து ஓடியது. திருப்பத்தூர் சாலையில் அதிகமான மழைநீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். தொடர்ந்து மூன்று நாள்களாக மழை பெய்து குளிர்ச்சி நிலவி வருவதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பரவலாக மழை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் சனிக்கிழமை பரவலாக மழை பெய்தது.

இப்பகுதிகளில் கடந்த சில வாரங்களாக கோடைகாலத்துக்கு நிகராக கடும் வெயில் நீடித்து வந்தது. இதனால் பகல் நேரங்களில் கடை வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. இரவில் புழுக்கத்தால் மக்கள் தூக்கமின்றி தவித்தனர்.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பகல் நேரங்களில் மிதமான வெயில் அடிப்பதும், மாலையில் வானத்தை கரு மேகங்கள் சூழ்ந்து குளிர்ந்த காற்றுடன் மிதமான மழை பெய்வதுமாக கால நிலை இருந்து வருகிறது. சனிக்கிழமை மாலை மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் பரவலாக விட்டுவிட்டு சாரல் மழை பெய்தது.

வெயில் கொடுமையை அனுபவித்து வந்த மக்களுக்கு இவ்வாறு மழை பெய்து வருவது இதமாக உள்ளது. நெல் நாற்று விதைப்புக்கு இந்த மழை பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## காரைக்குடி பகுதியில் பலத்த மழை

காரைக்குடியில் 2-வது நாளாக சனிக்கிழமை மாலையில் தொடர் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

காரைக்குடி மற்றும் சுற்றுவட்டாரங்களில் வெள்ளிக்கிழமை மாலையில் சுமார் 1 மணிநேரத்திற்கும் மேலாக இடி, மின்னல், காற்றுடன் கூடிய மழைபெய்திருந்தது. இந்நிலையில், சனிக்கிழமை மாலை சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது. அப்போது தொடர் இடி, மின்னல் ஏற்பட்டது. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பின்னர் இரவு 8 மணியளவில் மீண்டும் மின்சாரம் சீரானது. தொடர்ந்து பெய்த மழையால் நகரில் குளிர்ச்சி நிலவி வருகிறது.

## நாளை நெற்பயிரில் இயற்கை முறை பூச்சி, நோய் கட்டுப்பாடு இலவச பயிற்சி

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் புதன்கிழமை (ஆக. 31) நெற்பயிரில் இயற்கை முறை பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ரெ. பாஸ்கரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், நெற்பயிரில் இயற்கை முறை பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு குறித்து ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள் தங்கள் பெயர்களை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04367-260666, 04367-261444 என்ற எண்ணில் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கண்ணி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க மீனவர்கள் ஆர்வம்

ராமநாதபுரம்: இறால் விலை வீழ்ச்சியால் வருவாய் இழப்பை சரிகட்ட கண்ணி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க ராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

நாகபட்டினம், கன்னியாகுமரி, துாத்துக்குடி, ராமநாதபுரம் உள்பட 13 கடலோர மாவட்டங்களில் நாட்டுப்படகுகள், விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பிடித்துவரும் இறால், நண்டு, கணவாய், வாவல் உள்ளிட்ட மீன்களை வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யும் தனியார் ஏற்றுமதி நிறுவனங்கள், அவற்றை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. படகுகள் எண்ணிக்கை குறைவாக இருந்த போது மீன்பிடி தொழில் லாபகரமாக இருந்தது. தற்போது படகுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மீன்பிடி தொழில் நலிவடைந்து வருகிறது. இதனால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யும் விதமாக மீனவர்களுக்கு டீசல் மானியம் உள்ளிட்ட சலுகைகளை அரசு வழங்கிவருகிறது.

இந்நிலையில் இறால் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால் மீனவர்களுக்கு பலத்த வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதை ஈடுகட்டும் விதமாக மாற்று மீன்பிடி முறைக்கு மீனவர்கள் தாவி உள்ளனர். மீன்பிடி தொழிலுக்கு 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான கண்ணி வலைகளை பயன்படுத்துகின்றனர். இதன்மூலம் வருவாய் அதிக வருமானம் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மண்டபம் தேசிய விசைப்படகு மீனவர் சங்க நிர்வாகி பாலசுப்ரமணியன் கூறியதாவது: 3 ஆயிரம் கண்ணி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க அதிக சக்தி வாய்ந்த இன்ஜின் பொருத்திய விசைப்படகு உரிமையாளர்களுக்கு மட்டுமே முடியும். சக்தி குறைந்த இன்ஜின் பொருத்திய படகு உரிமையாளர்கள் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகின்றனர். இதனால் இறாலுக்கு உரிய விலை கிடைக்கவும், டீசல் மானியத்தை அதிகரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

**பண்ணை குட்டைகளுக்கு 100 சதவீதம் மானியம்**

ராமநாதபுரம்: பண்ணை குட்டைகள் அமைக்க அரசு 100 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவரது அறிக்கையில்:
விவசாயிகள் தங்களின் பட்டா நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க விரும்பினால், விவசாயத்துறை சார்பில் 100 சதவீதம் மானியத்துடன் பண்ணை குட்டைகள் அமைத்து தரப்படும். விரும்புவோர் தங்கள் நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல், நில வரைபடம் ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் அல்லது வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம்.
இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை வருமானம் அதிகரிக்க தினை பயிரிடுங்கள்!**

பழநி, : வருமானம் அதிகரிக்க தினை பயிரிடலாமென பழநி பகுதி விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை வழங்கி உள்ளது. தினை பயிரிட கோ-6, கோ(தி) 7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். புரட்டாசி பட்டம் ஏற்ற பருவம் ஆகும். செம்மண் மற்றும் இருமண் கலந்த நிலங்கள் உகந்ததாகும். பயிர் அறுவடைக்குப் பின் நிலத்தைச் சட்டிக் கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். வரிசை விதைப்பாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 10 கிலோ விதைக்க வேண்டும். தூவுவதாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதைக்க வேண்டும். 22.5 சென்டிமீட்டருக்கு * 7.5 சென்டிமீட்டர் இடைவெளியில் விதைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையளவிற்கு 600 அசோபாஸை அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

நிலத்தில் இடுவதாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 2 கிலோ அசோபாஸை மணல் மற்றும் 25 கிலோ தொழூஉரம் கலந்து தூவ வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழூஉரத்தை கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழ வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் சாம்பல் சத்துக்களை இட வேண்டும். இந்தப் பயிரை பொதுவாக பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதில்லை. அதனால் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. கதிர்கள் நன்கு காய்ந்து, இலைகள் பழுத்தவுடன் அறுவடை செய்து, களத்தில் காயவைத்து அடித்துத் தானியங்களைப் பிரித்து சுத்தம் செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்தப் பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மானாமதுரை வட்டாரத்தில் தொடர்மழை உழவுப்பணிகளை தொடங்கிய விவசாயிகள்

மானமதுரை, : மானாமதுரை சுற்று வட்டாரப்பகுதியில் தொடர்ந்து நான்கு நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால், மகிழ்ச்சி அடைந்துள்ள விவசாயிகள், உழவுப்பணிகளை தொடங்கியுள்ளனர். மானாமதுரை தாலுகாவில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் வான் மழையை நம்பியே மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மொத்த விவசாயப் பரப்பளவில் 20 சதவீதத்திற்கும் குறைவான அளவில்தான் ஆற்றுப்பாசனத்திலும், கிணற்றுப்பாசனத்திலும் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. மழையை நம்பி பயிரிட்ட நெல் நாற்றுகள் கருகின. நிலத்தடி நீரும் வற்றியதால் கிணற்றுப்பாசனம் மூலம் வெண்டை, கத்தரி, மிளகாய், பருத்தி சாகுபடிப் பணிகளும் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. சுட்டெரிக்கும் வெயில் மறைந்து பூமி குளிரும் வகையில் மழை பெய்து வருகிறது. நீரின்றி வறண்டு பாளம் பாளமாக வெடித்திருந்த கண்மாய், குளங்களுக்கு

தண்ணீர் வரத்துத் தொடங்கியுள்ளது. மாலை நேரங்களில் தினமும் மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் மிளகனூர், புதுக்குளம், கஞ்சிமடை உள்ளிட்ட நெல் பயிரிடும் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் உழவுப்பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

இது குறித்து விவசாயி வேலுச்சாமி கூறுகையில், "கோடை காலத்தில் சாகுபடிப் பணிகள் பெரும்பாலும் தொடங்குவது இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பயிரிட்ட நெல் பயிர்கள் சாவியாகிப் போய்விட்டன. வயலில் அவற்றை அறுக்காமல் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்காக விட்டுவிட்டோம். தற்போது கடந்த நான்கு நாட்களாக மழை தொடங்கியுள்ளதால் வயலில் தங்கியுள்ள நீரில் களைச்செடிகள் முளைக்கத் தொடங்கிவிடும். களைச்செடிகள் மண்ணில் உள்ள உயிர்ச்சத்துக்களை எடுத்துவிடும். கால்நடைகளின் எருக்களும் மண்ணிற்கு ஊட்டம் தருவதால் உழுவது அவசியம். மேலும் நிலத்தில் குறிப்பிட்ட அளவு ஆழத்திற்கு உழுவதால் மழைநீர் சென்று மண்ணின் தன்மையைப் பாதுகாக்கும். அதற்காக கோடை உழவுப்பணிகளைத் தொடங்கி உள்ளோம்" என்றார்.